ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2307/38 - 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.24

*2307/38 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*2022, யூலை 22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலமும் மற்றும் அதற்கு அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், கௌரவ சனாதிபதி அவர்களினால் கைத்தொழில் அமைச்சராகிய எனக்கு உரித்தளிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் செயற்பாடுகள், திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டத்திட்டங்களினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்தப்பட வேண்டிய சட்ட திட்டங்களை அரசியலமைப்பின் 45(5) ஆம் உறுப்புரையின் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துங்களின்படி, 2022.11.17 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்களுக்கு உரித்தளிக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மேலும், 2022 ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதியன்று என்னால் வெளியிடப்பட்ட 2301/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலானது இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

வைத்தியர் **ரமேஸ் பத்திரண**,
கைத்தொழில் அமைச்சர்.

*2022, நவெம்பர் 17.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

### கௌரவ சாமர சம்பத் தசநாயக்க, ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

| *நிரல் i* | *நிரல் ii* | *நிரல் iii* |
|---|---|---|
| *கடமைகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள்* | *அமுல்படுத்தப்பட வேண்டிய விதிகள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி, உள்ளூர் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு சாதகமான வர்த்தகச் சூழலை உருவாக்குவதற்கும், சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்களுக்கு மூலோபாய வழி காட்டுதலை வழங்குவதற்கும், பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கைத்தொழில் தொடர்பான நியமங்களை உருவாக்குவதற்கும், தேசிய திட்டத்தின் கீழ் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிரல் ii இல் குறிப்பிடப்பட்டவாறு, வரவு செலவுத்திட்டம் மற்றும் முதலீட்டுத் திட்டம் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்துதல், பின்பற்றுதல் மற்றும் மதிப்பாய்வு செய்தல். | 1. லங்கா லேலண்ட் நிறுவனம்<br>2. லங்கா அசோக் லேலண்ட் லிமிட்டட்<br>3. தேசிய கடதாசி கூட்டுத்தாபனம்<br>4. கஹகொல்ல பொறியியல் சேவைகள் கம்பனி லிமிட்டட் (KESCO)<br>5. தேசிய உப்பு லிமிட்டட்<br>6. லங்கா சீமெந்து லிமிட்டட்<br>7. இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்<br>8. கஹட்டகஹ காரிய லங்கா லிமிட்டட்<br>9. இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடுகள் பிரிவு)<br>10. பிசிசி (தனியார்) லிமிட்டட்<br>11. தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை<br>12. இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்<br>13. லங்கா பொஸ்பேற் லிமிட்டட் | தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை சட்டம் (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) |

## அட்டவணை II

### கௌரவ பிரசன்ன ரணவீர, சிறிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி இராஜாங்க அமைச்சர்

| *நிரல் i* | *நிரல் ii* | *நிரல் iii* |
|---|---|---|
| *கடமைகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள்* | *அமுல்படுத்தப்பட வேண்டிய விதிகள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி, உள்ளூர் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு சாதகமான வர்த்தகச் சூழலை உருவாக்குவதற்கும், சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்களுக்கு மூலோபாய வழிகாட்டுதலை வழங்குவதற்கும், பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க கைத்தொழில் தொடர்பான நியமங்களை உருவாக்குவதற்கும், தேசிய திட்டத்தின் கீழ் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிரல் ii இல் குறிப்பிடப்பட்டவாறு, வரவு செலவுத்திட்டம் மற்றும் முதலீட்டுத் திட்டம் மற்றும் திணைக் களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் | 1. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை<br>2. சிறிய நடுத்தர தொழில்முயற்சி மூலதன கம்பனி<br>3. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அதிகாரசபை<br>4. மரம் தொடர்பான வடிவமைப்பு நிலையம்<br>5. தேசிய கைப்பணிகள் பேரவை<br>6. புடவைக் கைத்தொழில் திணைக்களம்<br>7. இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவகம் | தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் (2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)<br><br>இலங்கை புடவைகள் மற்றும் தைத்த ஆடைகள் நிறுவன சட்டம் (2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)<br><br>தேசிய கைப்பணிப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவன சட்டம் (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

**கௌரவ பிரசன்ன ரணவீர, சிறிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் i* | *நிரல் ii* | *நிரல் iii* |
|---|---|---|
| *கடமைகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள்* | *அமுல்படுத்தப்பட வேண்டிய விதிகள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| நியதிச்சட்ட நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகளை செயற்படுத்துதல், பின்பற்றுதல் மற்றும் மதிப்பாய்வு செய்தல். | 8. இலங்கை புடவை ஆலைகள் எம்போரியம் லிமிட்டட்<br>9. லங்கா சலுசல லிமிட்டட்.<br>10. இலங்கை கைப்பணிகள் சபை (லக்சல)<br>11. தேசிய வடிவமைப்பு நிலையம். | |

EOG 11-0288